# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2024 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி A

### வினா இல. 01

இந்த வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25, இது 10 உப வினாக்களை உள்ளடக்கியுள்ளது. இதில் 5 வினாக்கள் பல்தேர்வு வினாக்களாகும். இங்கு தற்போதைய பாடத்திட்டத்திலுள்ள உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் என்ற பாடப்பரப்பிலுள்ள பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**1.1** இவ்வினா கிரயக் கணக்கீடு மற்றும் இருப்புக் கிரய எண்ணக்கரு ஆகியவை பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் இருப்புக் கிரயம் தொடர்பில் சரியான விடையை இனங்காணத் தவறியிருந்தனர்.

**1.2** இவ்வினா தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனிக்கு குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி தேய்மானத்தைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் மிகச் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர். இங்கு குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி தேய்மானத்தைக் கணிப்பிடுவதற்கான சரியான சூத்திரம் பற்றி பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

**1.3** இவ்வினா நிதிக் கணக்கீட்டின் மாறாத்தன்மையைப் பரீட்சித்தது. பொதுவாக, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நிதிக் கணக்கீட்டின் எண்ணத்தைச் சரியாக இனங் கண்டிருந்தனர். ஏனையவர்கள் இவ்வினாவுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடையை அளித்திருக்கவில்லை.

**1.4** இவ்வினா நிதிக் கூற்றுக்களின் அறிக்கையிடல் காலத்தின் பின்னர் இடம்பெற்ற நட்டத்தின் விளைவை எவ்வாறு முன்வைக்கலாம் என்பது பற்றிப் பரீட்சித்திருந்தது. பொதுவாக, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நிதிக் கணக்கீட்டில் வெளிப்படுத்துவது தொடர்பான யோசனையைச் சரியாக இனங்கண்டிருந்தனர். ஏனையவர்கள் திருப்திகரமான வழிமுறையில் இவ்வினாவை எதிர்கொள்ளத் தவறியிருந்தனர்.

**1.5** கிரயக் கணக்கீட்டின் இலாபத்தையும் நிதிக் கணக்கீட்டின் இலாபத்தையும் கணிக்கும்போது அவற்றுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகள் பற்றிய அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் அது பற்றிய போதிய அறிவின்மையால் அவர்களால் சரியான விடையை அளிக்க முடியவில்லை.

**1.6** இவ்வினாவானது உற்பத்திச் செயன்முறையுடன் தொடர்புபட்ட பல்வேறு செயற்பாடுகளுக்குமிடையே கிரயங்களை ஒதுக்கீடு செய்யும் முறைகள் மற்றும் தனித்தனியான உற்பத்திகளால் ஒவ்வொரு செயலினதும் பயன்பாட்டின் அடிப்படையில் பொருள்களுக்கு கட்டணம் வசூலிக்கும் முறைகள் ஆகியன பற்றி பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் விடைகள் சரியாக அமைந்திருந்தன.

**1.7** பங்காளர்களுக்கான ஊதியம், பங்குடமைக்கான மூலதன உள்ளீடு, புதிய பங்காளர் ஒருவரை அனுமதித்தல் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் குறிப்பிடுமாறு இங்கு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.8** இவ்வினா கிரயக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றி நேரடியாகவே கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளின் விடைகள் போதுமானதாக இருக்கவில்லை என்பதுடன் பரீட்சார்த்திகளிடம் கோட்பாட்டு ரீதியான அறிவு காணப்படவில்லை என்பது தெளிவாகியது.

**1.9** இவ்வினா தனிச்சங்கள் பற்றிப் பரீட்சித்திருந்தது. தனிச்சங்களுக்கான குறிப்பிட்ட பண்புகளைக் குறிப்பிட்டு, குறைந்தளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். இந்த அடிப்படைக் கணக்கீடுகள் பற்றிய தெளிவைப் பெறுவது மிகவும் முக்கியமானதாகும்.

**1.10** இந்த வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் வற் கட்டுப்பாட்டுக் கணக்கு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் கணித்தலைச் சரியாகச் செய்திருந்ததை அவதானிக்க முடிந்தது. மிகச் சில பரீட்சார்த்திகள் குறைந்தளவு கணிப்பீட்டு வழுக்களுடன் வற் கட்டுப்பாட்டுக் கணக்கைத் துல்லியமாகச் செய்திருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

இவ்வினா உரிமையாண்மைக் கணிப்பீடு மற்றும் இலாப, நட்டக் கணக்கின் தயாரிப்பு ஆகியன பற்றிய அறிவைப் பரீட்சித்தது. குறைந்தளவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடை அளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கோட்பாட்டு ரீதியான அறிவைக் கொண்டிருக்காததால் தரப்பட்ட சீராக்கங்களை சரியாக மேற்கொண்டிருக்கவில்லை.

கீழ்வரும் காரணங்களால் சில பரீட்சார்த்திகள் நன்றாக செயலாற்றவில்லை :

(1) அவர்கள் தேய்மானக் கணிப்பீட்டைச் சரியாகச் செய்திருக்கவில்லை.

(2) செலவுகளை வகைப்படுத்துவது பற்றிய அறிவு மிகவும் மோசமாகக் காணப்பட்டது.

(3) அட்டுறுக் கொடுப்பனவுச் சீராக்கங்கள் பற்றிய அறிவு போதியதாக இல்லை.

(4) இறுதி இருப்புச் சீராக்கங்களில் சரியான கவனம் செலுத்தப்படவில்லை.

(5) வருமான ஏற்பிசைவு பற்றிய புரிதல் போதியதாக இல்லை.

(6) உரிமையாண்மை என்றால் என்ன மற்றும் அதனை எவ்வாறு கணிப்பிடுவது? என்பது பற்றிய அறிவு போதியதாக இல்லை.

(7) நேர் செலவுகளுக்கும் நேரில் செலவுகளுக்குமிடையேயான வேறுபாடு பற்றி சரியான புரிதல் இல்லை.

(8) முற்பணக் கொடுப்பனவுச் சீராக்கங்கள் பிழையாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(9) இலாபச் சூத்திர முறை சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

(10) சிலர் வினாவில் கேட்கப்படாத காசேட்டைத் தயாரிப்பதற்கு குறிப்பிடத்தக்களவு நேரத்தைச் செலவிட்டிருந்தனர்.

(11) இலாப, நட்டப் பதிவுகள் வியாபாரக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.**

### வினா இல. 03

இவ்வினா இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கையும் பங்காளர் நடைமுறைக் கணக்கையும் தயாரிப்பது பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் கீழ்வரும் காரணங்களால் சரியாகச் செயலாற்றவில்லை:

(1) பகிர்வுக் கணக்கு மற்றும் பங்காளர் நடைமுறைக் கணக்கு ஆகியன தொடர்பான ஊடுசெயல்கள் பற்றிய தெளிவான புரிதல் காணப்படவில்லை.

(2) பங்குடமை விதிகள் பற்றிய அறிவு போதியதாக இல்லை.

(3) பங்காளர்களின் வருடாந்த சம்பளத்திற்குப் பதிலாக மாதாந்தச் சம்பளம் கவனத்திற் கொள்ளப் பட்டிருந்தது.

(4) சில பரீட்சார்த்திகளால் கட்டட வாடகையும் கடன் வட்டியும் நடைமுறைக் கணக்குகளில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(5) சிலர் ஆரம்ப மூலதன மீதிகளைக்கூட நடைமுறைக் கணக்குகளுக்கு கவனத்திற் கொண்டிருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 04

இங்கு, இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கையும் வருமான, செலவினக் கணக்கையும் தயாரிப்பது பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் கீழ்வரும் காரணங்களால் குறைந்த எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர் :

(1) பரீட்சார்த்திகள் இந்தக் கணக்கு பற்றி போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் வினாவிலிருந்து ஊடுசெயல்களை இனங்கண்டிருக்கவில்லை.

(2) பரீட்சார்த்திகள் அங்கத்துவக் கணக்கிற்கான இரட்டைப் பதிவுகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(3) சில பரீட்சார்த்திகள் அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கில் உரிய ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை எந்தப் பக்கத்தில் பதிவு செய்ய வேண்டும் என்பது பற்றிய எவ்வித அறிவையும் கொண்டிருக் காததுடன் சிலர் அங்கத்துவச் சந்தாவை எவ்வாறு கணிப்பிடுவது என்பதையும் இனங்கண்டிருக்க வில்லை.

(4) பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசித்திருக்கவில்லை, நிகழ்வு ஒன்றுக்கான செலவினங்களுக்கு அவர்களால் சரியான சதவீதங்களைப் பிரயோகிக்க முடியவில்லை.

(5) பரீட்சார்த்திகள் கண்காட்சி வருமானம் மற்றும் பிரதான கணக்குகளைச் சரியாகச் சமர்ப்பிக்கவில்லை.

(6) பரீட்சார்த்திகள் வருமானம் மற்றும் செலவினங்களைத் தனித்தனியாக இனங்கண்டிருக்கவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதையும் தரப்பட்ட பணி மீது விதிக்கப்பட வேண்டிய விலையைக் கணிப்பிடுவதையும் இவ்வினா எதிர்பார்த்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். ஆயினம் பரீட்சார்த்திகளில் சொற்ப சதவீதமானவர்களே இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகளின் கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் உற்பத்தி மட்ட நிலையை இனங்காணத் தவறியிருந்தனர்.

(2) இருப்புகள் தொடர்பான பேரேட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் சரியாகப் பதியப்படவில்லை.

(3) பரீட்சார்த்திகள் கொடுக்கல் வாங்கல்களை கணக்குகளில் சரியானவாறு மாற்றியிருக்கவில்லை. உதாரணமாக, மூலப்பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து WIP கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு.

(4) அதிகளவான பரீட்சார்த்திகள் குறித்த விலை மற்றும் எல்லையைக் கணிப்பிடுவது பற்றி போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் சரியான சதவீதத்தைப் பிரயோகித்து நேர் கூலிக் கிரயத்தைக் கணிப்பிடவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

இவ்வினா **(A), (B)** என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

**பகுதி (A)** ஆனது தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் EOQ மற்றும் பொருளுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டளைகளின் உத்தம எண்ணிக்கை ஆகியவற்றைக் கணிப்பிடுவதையும் பரீட்சித்தது.

(1) பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகளிடம் சரியான சூத்திரம் பற்றிய போதிய அறிவு காணப்படாததால் அவர்களால் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் சரியான சூத்திரத்திற்கான தரவுகளை தவறாகப் பிரயோகித்திருந்தனர்.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டளைகளின் உத்தம எண்ணிக்கையை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றி அறிந்திருக்கவில்லை.

**பகுதி (B)** ஆனது ஊழியர் ஒருவரின் சம்பாத்தியத்தைக் கணிப்பிடுவதைப் பரீட்சித்திருந்தது.

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சிலர் மிகையூதிய வீதத்தைத் துல்லியமாகக் கணிப்பிட்டிருந்தனர் ஆயினும் அவர்கள் மொத்த சேமிக்கப்பட்ட நேரத்திற்காக மிகையூதியத்தைக் கணிப்பிடாது வாராந்த சம்பாத்தியத்திற்காக மிகையூதிய வீதத்தை வெறுமனே கூட்டியிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகளுக்கு சேமிக்கப்பட்ட நேரத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றித் தெரிந்திருக்கவில்லை.

(3) **பகுதி A, B** ஆகிய இரண்டிலும் எண்கணித வழுக்களைக் காண முடிந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில்கூட இருக்கவில்லை.**

## <u>பகுதி C</u>

### வினா இல. 07

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்ததுடன் இது **(a), (b)** எனும் 2 பகுதிகளைக் கொண்டது. **பகுதி (a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பதையும் **பகுதி (b)** ஆனது நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பதையும் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவை முயற்சித்திருந்தனர் ஆயினும் அவர்கள் அனைவராலும் முழுமையான புள்ளிகளைப் பெற இயலவில்லை.

கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

**முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் இருப்பு நட்டத்திற்காக வியாபாரக் கணக்கில் சரியான சீராக்கங்களைச் செய்திருக்கவில்லை.

(2) தேய்மானத்திற்கான கணக்கீட்டுப் பதிவுகள் சரியாகக் கணிப்பிடப்படவில்லை. மோட்டார் வாகன அகற்றல் தொடர்பான தேய்மானம் சரியாகக் கருதப்படாமையே அதற்கான காரணமாக அமைந்திருந்தது.

(3) வாடகைச் சீராக்கம் முற்றடக்க வருமானக் கூற்றில் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

(4) பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியின் வரவு, செலவு மீதிகள் பற்றி சரியான அறிவைக் கொண்டிருக்கவில்லை.

(5) நீர் மற்றும் மின்சாரக் கணக்குகள், முற்றடக்க வருமானக் கூற்றில் சரியாக சீராக்கம் செய்யப்படவில்லை. இதற்கான காரணம் பரீட்சார்த்திகள் அட்டுறு மின்சாரத்தைச் சரியாக சீராக்கம் செய்யாமையே ஆகும்.

(6) வருமான வரிச் சீராக்கங்கள் சில பரீட்சார்த்திகளால் சரியாகச் செய்யப்படவில்லை.

**நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் மோட்டார் வாகனங்களின் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. இதனால், நிதி நிலைக் கூற்றிற்கான முன்கொணரற் பெறுமதியும்கூட பிழையாக அமைந்திருந்தது.

(2) சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகள் மீதியைச் சரியாகச் சீராக்கம் செய்திருக்கவில்லை. அதற்கான காரணம் வியாபார வருமதிகள் கணக்கில் சேத இழப்பு நட்டங்களுக்கான ஏற்பாட்டை அவர்கள் சரியாக சீராக்கம் செய்திருக்கவில்லை.

(3) செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையை சில பரீட்சார்த்திகள் சரியாகச் சீராக்கம் செய்திருக்கவில்லை.

**பிற குறிப்புகள் :**

(1) பரீட்சார்த்திகள் முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றுக்கான சரியான வடிவங்களை முறையாகப் பின்பற்றுதல் வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் விற்பனை, விநியோகச் செலவினங்கள் மற்றும் நிருவாகச் செலவினங்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர்புடைய செலவினங்களை சரியாக அடையாளங் காணுதல் வேண்டும்.

(3) முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரித்ததன் பின்னர், சில பரீட்சார்த்திகள் வரிக்கு முன்னரான இலாபத்தைப் பெறுவதற்கு கழிப்பனவு செய்கின்ற செலவுகளின் பட்டியலுக்காக மற்றுமொரு அட்டவணையைத் தயாரித்திருந்தனர். இது தேவையற்ற நேர விரயத்தை ஏற்படுத்துகிறது.

(4) பரீட்சார்த்திகள் விடைகளுக்கான தமது செய்முறைகளை உரிய இடங்களில் காட்டியிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் அவற்றை வெவ்வேறு இடங்களில் செய்து இணைத்திருந்தனர்.

- * * * -